155313

2A

[Sinhala library stamp]
1978-7-25
Sri Lanka இலங்கை

# இலங்கைத்

# தேசிய அரசுப் பேரவையின்

# 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க,

# அரசாங்க சேவை பரஸ்பர சகாயச்

# சங்க (திருத்தச்)

# சட்டம்.

(1978, சனவரி 12 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 25

தபாற் செலவு : சதம் 15

1978 ஆம் ஆன்டின் 2 ஆம் இலக்க,

# அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்க (திருத்தச்) சட்டம்

[1978, சனவரி 12 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 28/76 / 1009

## அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினால் பின் வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டமானது, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்க (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**283 ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பிரிவுக்கான திருத்தம்.**

2. 1966 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1973 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப் பட்டவாறானதும், இதனகத்துப்பின்னர் " முதன்மைச் சட்ட வாக்கம் " எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய காப்புவாசகத்தை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

" ஆயின், அத்தகைய ஊதியமானது மாதமொன்றிற்கு முந்நூறு ரூபாவை அல்லது மாதமொன்றின் ஏதேனும் பாகத்திற்கு அதற்கான விகிதாசாரத் தொகையை, விஞ்சுதலாகாது.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவுக்கான திருத்தம்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது, அப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

" (1) கூட்டுத்தாபன உறுப்பினர்களின் ஆண்டுப் பொதுக் கூட்டமானது, ஒவ்வோராண்டும் யூன் முப்பதாம் நாளுக்குப் பிந்தாமல் நடைபெறல் வேண்டும் ; அக்கூட்டத்தில் ஐந்தொகையொன்றும், இலாபநட்டக் கணக்கொன்றும், முற்போந்த திசம்பர் முப்பத்தோராம் நாளன்று முடிவடையும் பன்னிரண்டு மாதங்களுக்கான வரவு செலவுக் கணக்கொன்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ; அவை யாவும் கூட்டுச் செயலாளராலும், பொருளாளராலும் தயாரிக்கப்பட்டு உரிய முறையில் கணக்காய்வு செய்யப்படலும் வேண்டும்.".

**1977 யூன் 4 ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தினைச் செல்லுபடியாக்குவதற்குக் கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன் கொடுத்தல்.**

4. இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், 1976, ஒகத்து 1ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டதெனக் கருதப்படல் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க, 1977 யூன் 4 ஆந் தேதியன்று நடைபெற்ற கூட்டுத்தாபன உறுப்பினர்களின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் அத்தகைய கூட்டத்தில் எடுத்தாளப்பட்ட நடவடிக்கைகளும், இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினாற்றிருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழும் அவற்றுக்கிணங்கவும் உரியமுறையில் நடாத்தப்பட்டதெனவும் எடுத்தாளப்பட்டனவெனவும் கருதப்படல் வேண்டும்.

2—எ 31262—752 (01/78)